# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2025 கும்பம் (மார்ச்-94) விலை உருபா 1-50 (இதழ் எண் : 169)


# ஆட்சியில் உள்ளவர்கள் பிறந்தநாள்-பிற விழாக்கள் கொண்டாடுவதைத் தடை செய்ய வேண்டும்!

## மக்கள் வரிப் பணத்தில் குளிர்காயும் அமைச்சர்களின் பதவியை நீக்கம் செய்தல் வேண்டும்!

'பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும்
வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு' —735

'தலைமைகள் பல தாங்கிய குழுக்களும் (இன்றைய பொருளில் கட்சிகளும்), நாட்டைப் பல வகையிலும் அழிவுகள் செய்கின்ற உட்பகைகளும், அரசனை மிகவும் அலைக்கழித்துத் துன்பம் தருகின்றனவும் மக்களைக் களவுக்காகவும் கவர்வுக்காகவும் கொன்று தீர்க்கின்ற வழிப்பறிக் கொலைஞர்களும் இல்லாமல் இருபபதே சிறப்பான நாடாகும்'

—என்பது திருவள்ளுவப் பேராசான் கருத்தாகும். நாட்டை— நாட்டினது ஆட்சியை அலைக்கழித்து அழிவு செய்கின்ற மூன்று கூறுகள் பல குழுக்கள் (கட்சிகள்) உட்பகைகள், களவும் வழிப்பறியும் செய்வதும் அவ்வாறு செய்வதற்காக ஒன்றுமறியா மக்களைக் கொல்கின்ற தீயவர்களும் ஆகியவை அவை. இவை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட திருவள்ளுவர் காலத்தில் இருந்த உண்மையால், அவர்தம் திருக்குறளில் இக் கருத்தைக் கூறிச் சென்றுள்ளார். ஆனால் குடியாட்சி விளங்கிடும் இக்காலத்தும் இக்கருத்து உண்மையே என்பதற்கு நாள்தோறும் அரசைப் பல்வேறு வகைகளில் அலைக்கழித்து வரும், மேற் கூறிய மூன்று கூறுகளும் செய்து வரும் செயல்களே மெய்யான சான்றுகளாகும்.

ஒரு நாட்டில், எந்தக் கொள்கையாளர் ஆட்சியில் இருந்தாலும், அதற்கு எதிரான அல்லது வேறான கொள்கைகளை உடைய குழுவினர் அல்லது கட்சியினர் இருப்பதும் உண்மையே. அதைத் தவறு என்றோ, கூடாது என்றோ சொல்வது, கருத்து மலர்ச்சியும் அறிவியல் வளர்ச்சியும, உரிமையுணர்வுக் கிளர்ச்சியும் உள்ள இக்காலததிற்குச் சிறிதும் பொருந்தாது. திருவள்ளுவர் சுட்டிய குழுக்கள் அவர் காலத்திலும் இருந்தமையாலேயே அவரும் அக்கருத்தைச் சுட்டிக் காட்டவும், அந்நிலை தவறன்று என்பது புலப்பட அச் சொல்லிற்கு

Scanned with CamScanner

வேறு 'உட்பகை' 'கொல்குறும்பு' எனும் சொற்களுக்கு இட்ட 'பாழ்செய்யும்' 'வேந்து அலைக்கும்' என்னும் அடைச் சொற்கள்போல் போடாமற் கூறவும் வேண்டியிருந்தது. இவற்றிலிருந்தே நாட்டு மக்களிடையில் ஆட்சி பற்றிப் பல்வேறு கருத்துகள் கொண்ட குழுக்கள் அல்லது கட்சிகள் இருக்கலாம் என்பதைச் சிறந்த அரசியல், பொருளியல், குமுகவியல், மக்களில் பேரறிஞரான திருவள்ளுவரே ஒப்புக் கொள்கிறார் என்று உறுதி கூறலாம்.

ஆனால், அக் குழுக்கள் அல்லது கட்சிகள் ஆட்சியை நடத்த உதவி செய்ய வேண்டுமே தவிர, ஆட்சியாளரைப் பலவகைத் தொல்லைகளுக்கும் உள்ளாக்கவோ, நாட்டு வளத்தையும் நலத்தையும் பாழ்செய்யவோ முனைந்து விடக்கூடாது என்பதே திருவள்ளுவப் பேராசானின் திரண்ட கருத்தாகும் என்பதை நாம் மனத்திற் கொள்ள வேண்டும்.

இனி, அக் குழுக்கள் தொல்லை கொடுக்குமானால் அதன் விளைவு எப்படியிருக்கும் என்பதைக் குறிப்பால் உணர்த்தவே, அடுத்து வரும் இரண்டு கேடுகளுக்காக இரண்டு அடைச் சொற்களாகிய 'பாழ் செய்யும்' 'வேந்து அலைக்கும்' என்பவற்றைச் சுட்டிக் காட்டுகிறார். அஃதாவது, அரசுக்கு எதிர்நிலைக் கருத்துகள் கொண்ட குழுக்கள் தங்கள் கடமைகளைச் சரிவர, நேர்மையாகச் செய்யாமற் போகுமானால். அவை 'உட்பகையாகவும்' 'கொல் குறும்பு' போலவுமே செயல்பட வேண்டியதாக இருக்கும் என்பது அவர் செய்யும் எச்சரிக்கை.

இங்குதான் நாம் இன்னொரு கருத்தையும் இன்றைய நிலையில் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். அஃது என்னவெனில், இன்றைய அரசு குடியரசு—குடியாட்சியரசு—ஆகையால், நாட்டில் உள்ள பல்வேறு கொள்கைக் குழுக்களில் ஒன்றே ஆட்சியை அமைக்கவும் முடிவதாகும். அந்நிலையில் அக்குழு நல்லவையல்லாத எதிர்க்கட்சிகள் செய்வதுபோல, நாட்டின் பொருளியலைப் பாழ்படுத்துகின்ற செயலையும், நாட்டு மக்களைத் தனக்குள்ள ஆட்சியதிகாரத்தால், நேராகவோ, மறைமுகமாகவோ கொள்ளையடிக்கின்ற, அஃதாவது வழிப்பறி செய்கின்ற வகையிலோ அல்லது வேறு வகையிலோ நாட்டு நலன்களுக்கு எதிராகவும் செயல்பட முன்வரலாம் அன்றோ? அதைத்தான இப்பொழுதுள்ள அரசியல் நிலையில் நாம் நினைவு கூர வேண்டியுள்ளது. இவ்விடத்தில்,

'வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்,
கோலொடு நின்றான் இரவு'—(552) என்னும்

திருக்குறட் கருத்தையும் நாம் ஒப்பவைத்துப் பார்க்கலாம்.

இன்றுள்ள ஆளும் கட்சி அல்லது குழு, நாட்டில் உள்ள பல்வேறு கொள்கைக் குழுக்களில் ஒன்றேயாகும். இது, தன் தவறான நடைமுறைகளால், மக்களிடையில் நன்கொடை என்னும் பெயரிலோ, வேறு விழாக்கொடை என்னும் பெயரிலோ, பணம் தண்டுவதையும், அவ்வகையாகவன்றி வரிகளாகத் தண்டிய் பொருளை விழாக்கள், வேடிக்கைகள் என்னும் வகையிலோ செலவிட்டு அழிப்பதையும் கூட, இங்குக் காட்டப்பெற்ற திருக்குறள்கள், தவறு, குற்றம் என்று சுட்டிக் கண்டிப்பதையும் நாம் நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

இக்கால் தமிழகத்தை ஆட்சி செய்து வருகின்ற அ.தி.மு.க.வும் அதன் ஆட்சித் தலைவியும் முதலமைச்சராகவுள்ள செயலலிதாவும், ஆட்சிக்கு வந்த நாளிலிருந்து கடந்த இரண்டு ஆண்டுகளாக, பிறந்தநாள் என்னும் பெயரிலும், ஆட்சி சார்பாகவும் மக்கள் சார்பாகவும் கொண்டாடப் பெற்ற விழாக்களும் வேடிக்கைகளும் பற்பலவாகும்! குறைத்துக் கணக்கிட்டாலும் மாதம் இரண்டொரு விழாக்களாகிலும் இருக்கும்! மக்கள் நலன்கள் என்னும் கற்பனைத் திட்ட அறிவிப்பு விழாக்கள், கட்டடங்கள் திறப்பு விழாக்கள், குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டு விழாக்கள், மாவட்டப் பிரிவினை விழாக்கள், விளையாட்டு அரங்க விழாக்கள், செயல் துறைத் தொடக்க விழாக்கள், பரிசளிப்பு விழாக்கள், மதத் திருவிழாக்கள். ஆட்சியின் வெற்றி விழாக்கள், கலைஞர்களுக்கும் அறிஞர்களுக்கும் பட்டங்கள், வெகுமதிகள் வழங்கு விழாக்கள், பல்கலைக்கழகப் பட்டமளிப்பு, பட்டம் ஏற்பு விழாக்கள், திரைப்பட விழாக்கள், இசை விழாக்கள், விளையாட்டுத் தொடக்க விழாக்கள், திருமண விழாக்கள், ஏழைகளுக்கு வேட்டி, சேலைகள் வழங்கு விழாக்கள், தேர்தலில் வெற்றி பெற்றதற்கான விழாக்கள்—என இன்னோரன்ன குனிந்து நிமிர்ந்த விழாக்களுடன் தம்முடைய பிறந்தநாள் விழாக்கள் எனச் சொல்லிமாளாது. இவ்வாறான விழாக்கள் வேறு பிறர் காமராசரோ, பக்தவத்சலமோ முதலமைச்சர்களாக இருந்த காலத்தில் ஒன்று கூட நடந்ததில்லை என்பது நம் அனைவருக்கும் தெரியும். காமராசரின் அகவை நம்மைப போல் அவருக்குக் கூடத் தெரிந்திருக்குமோ என்னவோ? ஆனால், செயலலிதாவின் அகவை தமிழ்நாட்டில் உள்ள குட்டிச் சுவருக்கும் கூட வெட்ட வெளிச்சமாகத் தெரியும். ஏனெனில் அங்கெல்லாம் கூட அவரின் அகவையைக் குறித்து அடித்து வெளியிடப் பெற்ற பெரிய பெரிய சுவரொட்டிகள் பல்வேறு வண்ணங்களில் காட்சி தந்து கொண்டு இருப்பதை இந்த நாட்டில் பிறந்த எவரும் காணாமல் பாதையில நடந்திருக்க முடியாது! அவரின் சுவரொட்டிகள்தாம் இலக்கக் கணக்கில் என்றால் அவரின்வெட்டுருவங்களோ பல்லாயிரக்கணக்கில்!

இவ் விழாக்களுக்காகச் செலவிடும், அல்லது இதுவரை செலவிட்டிருக்கும் பணங்களைக் கொண்டு

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

# தமிழா, நீ ஆர்த்தெழு!

-இலெனுர்டு.

(முன்னுரை:

ஆண்டைகளாலும், வந்தேறிகளினுலும் நமது இனம் சுரண்டப்படுவது எப்போது நிறுத்தப் படும்? தமிழர் தம் மானம் காக்க எழுவது எப்போது? அடக்குமுறையையும் அடிமைத்-தனத்தையும் எத்தனைக்காலம்தான் பொறுப்பது? எழு! அல்லது விழு!! தமிழராகிய நாமே இதை இனி முடிவு செய்ய வேண்டும். மாயைகளைக் கிழிக்க வேண்டும். மந்த நிலையை உதறித்தள்ள வேண்டும். அறியாமை அகல வேண்டும். விடு-தலைக்கதிரோன் தோன்ற வேண்டும். சிந்தித்-தால், சீறி எழுந்தால் எல்லாம் நம்மால் முடியும். கலந்துரையாடுங்கள்! கருத்துரை கூறுங்கள்! திறனாய்வு கூட செய்யுங்கள்! எம்மோடு உம் கருத்துகளை, உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.)

தமிழினம் இன்று இரு கட்டாயங்களுக்கு நடுவில் தள்ளப்பட்டுவிட்டது. ஒன்று, இழப்புகள் சிலவற்றை வீரத்துடன் சந்தித்து இனவிடுதலையை வென்றெடுப்பது; அல்லது, இன அழிவைக் கோழைகளாய் எதிர்கொண்டு காத்திருப்பது. அண்டை நாட்டில், நம் ஈழத்து உடன்பிறப்புகள் விடுதலைக்கான மூகவரியைத் தம் குருதியில் குழைத்து உறுதியாக எழுதிவிட்டார்கள். அங்கு, நம்மவரின் வெற்றி, தவிர்க்க முடியாததாகி விட்-டது. இப்புறத்திலோ, ஆழ்ந்த உறக்கமும், அடிமை வேட்கையும்(மோகமும்) நம் தமிழரை ஆட்கொண்-டிருக்கிறது. பிற இன வந்தேறிகளின் வழிப்பறி-யும், மடிப்பறிப்பும் தொய்வில்லாமல் தொடர்கின்-றன. காலங்காலமாய்த்தமிழரில் வேரூன்றியிருக்கும் அடிவருடித்தனமும், இளித்தவாய்த்தனமும் இணைந்து இன்று, இந்த இனமே ஓர் அடிமை இன-மாக வீழ்ந்து கிடக்கும் இவ்விழிநிலையை என்ன-வென்று சொல்வது?! மண்ணை இழந்து, மானம் இழந்து சொந்த நாட்டிலேயே பிறருக்கு ஏவல்புரிய எதிர்பார்த்துக் காத்திருக்கும் எமது இனத்தை என்னசொல்லி இடித்துரைப்பது!?

## 'இன்று நேற்றன்று, இந்த அடிமை வேட்கை:

தமிழரின் இளித்தவாய்த்தனம பழங்காலந் தொட்டதே. ஆரிய நாடோடி இன மக்களிடையே இருந்த போர்க்குணமும் வெற்றிமீது கொண்ட தாகமும் நம்மவர்க்கு இம்மி கூட இருந்ததில்லை. மாடோட்டிக் கொண்டு வந்த பார்ப்பனப் பிறதேசி களிடம்(பரதேசிகளிடம்) தன் சொந்த மண்ணை இழந்தான் தமிழன். வந்தவனுக்குக் குற்றேவல் புரிய, தன்னைத்தாழ்த்திக் கொண்டான். நம் இனப் பெண்டிரை ஆரியக் கோவில்களில் இழி தொழில் புரிய அந்த வந்தேறிகள் இழுத்துச் சென்று அமர்த்திய போதும், அதைப் பொறுமையோடு அனுமதித்தான். "அந்த வேசிகளுக்கு பிறந்தவர்-கள்தாண்டா நீங்களெல்லாம்" என்று அவர்கள் கொக்கரித்துத் தூற்றியபோதும் இவன் கைகட்டி, வாய்பொத்தி ஏற்றுக் கொள்கிறுன். வாசந்தி எனும் பார்ப்பாத்தி 'இந்தியா டுடே' எனும் பார்ப்-பன இதழில் கடந்த செப்டம்பர் மாத வெளியீட்டில், தேவதாசி முறையின் இன்றியமையாமையை எடுத்துரைத்தும், தமிழனுக்கு இன்னும் மானம் வந்த பாடில்லை.

1311-ஆம் ஆண்டில் இசுலாமியப்படைகள் மாலிக்காபூர் எனும் மகாராட்டிய தள்பதி தலைமை-யில், தமிழகத்தின் பல பகுதிகள் மீது போர் தொடுத்து, நம்மவரைத் துன்பங்கள் பலவற்றிற்கு உட்படுத்தின. அப்போது திருச்சிக்கருகில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி பற்றிக் கத்தோலிக்கத் துறவி ஒருவர் குறிப்பு எழுதுகிறுர்.

"ஊர் மக்கள் அனைவரும் ஊரின் திறந்த வெளிக்குத் திரண்டனர். ஆண்கள், பெண்கள், முதியோர், இளையோர். குழந்தைகள் என்று இன்னபிறர், அவர்களுடன் கூடத் தாம் வளர்த்த ஆடுகள், மாடுகள் அனைத்தையும் ஒருங்குக் கூட்டினர். அனைவரையும் சுற்றிப் பெரிய வேலி ஒன்று அமைக்கப்பட்டது. முடிவில் விறகு வட்டத்தின் உள்ளே திரண்டிருந்த ஊர் மக்கள். விறகு-களுக்குத் தாமே தீ மூட்டிக் கொண்டனர். அனைவரும் கதறிக் கதறித் தீயில் வெந்து செத்தனர். (1)

அன்று தொட்டு இன்றுவரை. எதிர்ப்புகளை எதிர்கொள்ள திறமையற்று இருப்பது மட்டுமல்லா மல், இழப்புகளைச் சுவைக்கிற, அதிலும் பெருமைப் படுகின்ற ஓர் இனமாகவே நாம் இருந்திருக்கின்-றோம். இந்திய விடுதலைக்கு முன்பு இருந்த சென்னை மாநிலத்தின் முதன்மை அமைச்சர்களாக-வும், பிற அமைச்சர்களாகவும் பதவிகளைப் பிடித்துக் கொண்டவர்கள் பெரும்பாலும் வேற்று இனத்த-வரே. குறிப்பாக, தெலுங்கர்களே ஆட்சியைப் பிடுங்கி(அபகரித்து) தன்வயப்படுத்திக் கொண்ட-னர். 1926-ஆம் ஆண்டில் நடைபெற்ற மூன்ருவது பொதுத் தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும் பெரும் பான்மை கிடைக்காத நிலையிலேயே முதன்முறை-யாக தமிழர் ஒருவர் முதலமைச்சரானுர். அவர்தாம், நயன்மைக் கட்சியிலிருந்து (நீதிக்கட்சி) விலகி-யிருந்த முனைவர் சுப்பராயன் எனபவர். 1930-இல் அவரது அமைச்சரவையும் கவிழ்ந்தது. மீண்டும் தெலுங்கர்கள் ஆட்சியைப் பிடித்தனர். 1930 முதல் 32 வரை ஆந்திரரான சித்தூர் வி.முனுசாமி அவர்கள் முதலமைச்சரானுர். 1932 முதல் 37வரை ஆந்திரரான பொப்பிலி அரசர் முதல்வரானுர். பின்

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

# உடல் உழைப்பு-பொருள்கள்-பணம்-இவை பற்றி உழைக்கும் மக்களுக்கு ஒரு விளக்கம்!

கரடிப்பட்டி. க.கண்ணன். அறி.இ.

உடல் உழைப்பு-உழைப்பின் மூலம் உருவாக்கப்படும் பொருள்கள் — உழைப்பையும் பொருள்களையும் அளவிடுகின்ற அல்லது மதிப்பிடுகின்ற தாள்பணம்-இந்த மூன்று வகையான ஆற்றல்களின் தன்மை-களையும் ஒன்றிற்கொன்று எவ்வாறு தொடர்புடை-யது என்பதையும் உழைக்கும் மக்களாகிய உழவர்-களும் தொழிலாளர்களும் புரிந்து கொள்ள வேண்டும். இவற்றைப் புரிந்து கொண்டாலே, உழைக்கின்ற மக்கள் வறுமையில் வாடுவதற்கும், உருவாக்கம் செய்யப்பட்ட பொருள்களை அல்லது உழைப்பு ஆற்றலை தங்கள் வயப்படுத்திக்கொண்டு, ஒரு குறிப்பிட்ட அளவுக் கருவியான தாள் பணத்தை மட்டும் கொடுத்து விட்டு, ஒரு சில உழைக்காத பிரிவினர் ஆடம்பர வாழ்க்கை வாழ்-வதற்கும் ஆன காரணத்தை நாம் தெரிந்து கொள்ள முடியும்.

நாம் உயிர் வாழ்வதற்குத் தேவையான உணவுப் பொருள்கள், உடைகள், வசிப்பதற்கான வீடுகள் போன்ற அடிப்படைத் தேவைகளை உழைக்கும் மக்கள் தங்கள் உடல் உழைப்பின் மூலம் உருவாக்குகின்றனர். எடுத்துக் காட்டாக, உணவுப் பொருள்களுள் ஒன்றான நெல் தானாகவோ அல்லது மந்திரத்தினாலோ விளைவதில்லை. உழவர் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் நெல் விளைவிக்க விரும்பினால், முதலில் நாற்று விடுவதற்காக நாற்றங்காலை உழுது சமன்படுத்தி உரம் இட வேண்டும். பின்னர் நெல்லை நாற்றங்காலில் பாவி, நீர்பாய்ச்சி பயிர்களைப் பூச்சி, பூஞ்சுன நோய்களி-லிருந்து பாதுகாக்க மருந்து தெளிக்க வேண்டும். பின்னர் குறிப்பிட்ட நாள் சென்றவுடன் நடுவ-தற்கு நடவு வயல் அணியம் செய்யப்பட வேண்டும். இதிலும் தண்ணீர் பாய்ச்சி உழவு மாடுகளாலோ அல்லது இயந்திரக் கலப்பையினாலோ உழுது சமன் படுத்த வேண்டும். பின்னர் இயற்கை உரமோ அல்லது செயற்கை உரமோ போட்டு நடவு செய்து தொடர்ந்து நீர் பாய்ச்ச வேண்டும். பின்னர் களை எடுத்துப், பயிர்ப் பாதுகாப்புச் செய்து குறிப்பிட்ட நாட்களுக்குப்பின் அறுவடை செய்ய வேண்டும்.

இந்த நெல் விளைவில் அந்த உழவர் குடும்பத்திலுள்ள சிறு குழந்தைகளிலிருந்து அகவை வந்த அனைவரும் நேரம் பார்க்காமல் இரவு பகல் என்று நோக்காமல், வெயில் என்றும், மழை என்றும், பனி என்றும் எண்ணாமல் உழைக்கின்ற-னர். நெல் நாற்றுப் பாவியதிலிருந்து நெல் அறுவடையாகும்வரை அந்த உழவர் குடும்பத்தின-ருடைய உடல் உழைப்பு எவ்வளவு? இதற்காக மற்ற இடு பொருள்கள் வாங்குவதற்குச் செல-வழித்த பணம் எவ்வளவு? என்பதை உழவர் குடும்பத்தினர் சரியாகக் கணக்கிடுவதில்லை. அவர்-களை உழைக்க வைக்க இந்த முதலாளிய அரசும் கணக்கிடுவதில்லை. 'உழுதவன்' கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது'— என்று நம் முன்னோர்-கள் சொல்லியிருந்தும் நாம் கணக்குப் பார்க்காமல் மற்றவர்களுக்காக உழைத்துக் கொடுத்துவிட்டு நாம் வறுமையிலேயே வாடுகின்றோம். இவ்வளவு உழைப்பினால் விளைவு செய்யப்பட்ட நெல்லை ஒரு சிறு வணிகன், பெரிய நகரத்தில் மொத்த வணிகன் என்ன விலைக்கு வாங்குகிறானோ அதை அடிப்படை-யாக வைத்தும், தனக்குப் போதிய ஊதியம் வைத்தும் வாங்குகிறான். இந்த உழவர் குடும்பத்தினரின் உழைப்பைக் கணக்கிடாமல் அரசு அதிகாரிகளும், வணிகர்களும் மிகக் குறைந்த விலைக்கு வாங்குகின்றனர். அவர்களிடம் இருப்பது வெறும் தாள்(காகிதப்)பணம். நம்மிடம் இருப்பது விலை மதிக்க முடியாத உழைப்பால் உருவாக்கப் பட்ட உணவுப் பொருளாகிய நெல்; இந்த இடத்தில் தான் உழைக்கும் மக்களின் ஒரு பிரிவினரான உழவர் கள் நன்கு சிந்திக்க வேண்டும். அரசால் அச்சடிக்கப் பட்ட தாள்(காகிதப்)பணம் என்பது பொருள்களை மதிப்பீடு செய்கின்ற அளவுக் கருவிதான். அதற்கு மேல் அதனிடம் எந்த ஆற்றலும் இல்லை. பண்ட மாற்றுக்கு எளிமையாக மாழை(உலோக) நாண-யங்களை முன்பு வணிகப் பிரிவினர் உருவாக்கிக் கொண்டனர். அதே வணிகப் பிரிவினர் இன்று பெரிய முதலாளிய அரசாக மாறிக் கொண்டு தாள் (காகிதப்) பணத்தை அச்சடித்துக் கொண்டிருக் கின்றனர். நெல்லைத்தான் நாம் உணவாக உண்ண முடியுமே தவிர, வெறும் பணத்தை உண்ண முடியாது. நெல் அரிசிக்கும் பணத்திற்கும் உள்ள வேறுபாட்டை மிக நுட்பமாகச் சிந்திப்பதால் உழைப்பு ஆற்றலின் முதன்மை உணரப்படும்.

உழவர்கள் தாங்கள் விளைவு செய்த பொருள்களைக் குறைந்த பண மதிப்புக்குக் கொடுத்து விட்டுத், தங்களுக்குத் தேவையான மற்ற பொருள்களை அதிக மதிப்பாக்கி அல்லது அதிக விலைக்கு வாங்குகின்றனர். நேரடியாக உடல் உழைப்பில் ஈடுபடாத இடைத்தரகர்களாகிய அரசு அதிகாரிகளும் வணிகர்களும் நாம் விளை-வித்த உணவுப் பொருள்களைக் குறைந்த மதிப்புக்கு வாங்கி, அதிக மதிப்புக்கு விற்கின்றனர். இதனால் அரசு அதிகாரிகளும் வணிகர்களும் உழைக்காமல் ஆடம்பர வாழ்க்கை வாழ்கின்றனர். உழைக்கின்ற

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

தொடர்: 2

# இந்தியர் ஆட்சியில் தமிழகம்

(அதியமான். —தாளையூத்து.)

(இதழ் எண் : 168-இன் தொடர்ச்சி)

மொழி, இன, நாட்டுப்பற்றற்றவர்கள் பலர்; இன உணர்வு அற்றவர் பலர். எனவே எதிலும், ஏமாறி விடுகிருர்கள். இவர்களை அரசு நல்லவர்களாய்,வல்லவர்களாய் வாழவிடாதபடி மேலும் மூடக் கொள்கையிலேயே வாழும்படி செய்து விட்டால், மேல்தட்டில் இருந்து கொண்டு இவர்களை அடிமையாக்கி ஆள முடியும் என்றிருக்கிருர்கள். இந்தியாவின் முதல் குடிமகன் என்றழைக்கப்படும் குடியரசுத் தலைவர்கள் சங்கராச்சாரியார்களின் கால்களில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து கிடக்கிருர்கள் என்ருல், இந்த நாடு மூடப்பழக்கங்களிலிருந்து இன்னும் விடுபடவில்லை, மக்களை அறிவாளியாக வாழவிடாதபடி ஆளுபவர்கள் இயக்கிக் கொண்டிருக்கிருர்கள். சமயச் சேர்க்கையற்ற நாடு எனக் கூறிக் கொண்டால் போதுமா? நடப்பு அப்படியில்லையே. முன்னுள் குடியரசுத் தலைவர் செயில்சிங் சீக்கிய குருமார்களின் செருப்புகளிலிருக்கும் தூசுகளை துடைத்தார். அதுவும் சமயத் தொடர்பான ஒறுப்பு. தலைமையமைச்சரோ கோவில் கோவிலாகச் சென்று அங்குள்ள சடங்காளன்(புரோகிதன்), இரவலன் (பரதேசி) ஆகியவர்களோடு கூடிக் குலாவி வருகிருர். இவர்களின் இச் செயல்களைக் கண்ட மக்களுக்குச் சிறிதேனும் அறிவு வளருமா? வளராது. மூடநம்பிக்கையே வளரும்.

அறிவு வளர மக்கள் கற்க வேண்டும். அரசு தன் நாட்டு மக்களுக்குக் கல்வியைக் கற்பிக்க வேண்டும். ஆரியர் சூத்திரர்களுக்குக் கல்வியைக் கற்பிக்கக் கூடாது எனச் சட்டம்(மனுதர்மம்)எழுதி வைத்து அடிமைப் படுத்தியவர்கள். ஆங்கிலேயர் இந் நாட்டை ஆண்டபோது அச்சட்டம் நொறுக்கப் பட்டது. பல பள்ளிகளை ஏற்படுத்தி அனைவரும் கற்க வாய்ப்புகள் வழங்கப்பட்டன. இப்போது மாந்தர்களுடைய பிள்ளைகள் படிக்கும் இடங்களாகப் பள்ளிகளில்லை. அவை மாட்டுக் கொட்டில்களாய்க் காட்சி அளிக்கின்றன. ஒரே அறைக்குள் நூற்றுக்கணக்கான மாணவர்களை அடைத்து வைததுக் கூச்சல் போட வைத்திருக்கிருர்கள். கட்டிடம் கட்டும்போது போட்ட தரைக்கட்டிடம் இடிந்து விழும் மட்டும் பழுதுபாராமல் குண்டும் குழியுமாக உள்ளன. அது போலவே கதவுகள் பலகணிகள்(சன்னல்கள்) உடைந்தும், சில இல்லாமலும் இருக்கின்றன. எழுதிக் காட்டக் கரும் பலகைகள் இல்லை. ஆசிரியர்கள் அமர நாற்காலிகள் இருந்தாலும் நான்கு கால்களும் இருக்கா. மிசை (மேசை)கள் இருக்கா. கற்பிப்பதற்குத் துணைக்கருவிகளும் இருக்கா. இருந்தாலும் அவை யாவும் கரையானுக்கு உணவாகி இருக்கும். அழிந்த கருவிகளுக்குப் பகரமாக(பதிலாக)மீண்டும் வழங்க முடியாத பொருளியல் தட்டுப்பாடு. இப்படிப்பட்ட நிலைகள் எதுவும் கல்வி அலுவலர்களுக்குத் தெரியாது. ஆசிரியர்களும் இதனைப் பற்றி ஒன்றுஞ் சொல்ல முடியாது. ஆசிரியர்களுக்கும் கூடுதல் ஊதியம், நன்னர்த் தொகை (போனசு) சம்பள உயர்வு, கூடுதல் விடுப்பு போன்ற தந்நலக் கோரிக்கைகளிலேயே முழுக் கவனம் உண்டு. சிலர் இதுவுங் கூட எப்படியானுலும் சரி ஆண்டவன் விட்ட வழி என்று பேசாமல் இருந்து விடுவர்.

பேசாமல் இருப்பவர்களுக்கு அரசு 'நல்லாசிரியர்'பட்டம் கொடுப்பார்கள். பேசாமலிருப்பவருக்கு நல்லாசிரியர் பட்டம் கிடைக்கிறதென, பேசாமல் இருப்பவனை ஊக்குவிக்க இப்படியோர் ஏற்பாடு. சார உணவு, இலவய உடை, இலவயச் செருப்பு முதலிய பொருள்களைக் கடவுள் தமிழ்நாட்டுக் குழந்தைகளுக்குத்தான் கிடைக்க வேண்டுமென்று அவர்களுடைய தலையில் எழுதிவைத்து விட்டார். வேறு நாட்டுக் குழந்தைகளுடைய தலையில் எழுதி இருந்தால் கடவுளைத் தமிழ்நாட்டிற்கு நாடு கடத்தி விடுவார்கள். கலைமகளே(சாசுவதியே) இங்கேதான் குடியிருக்கிருள். வேறு நாட்டில் போய் அந்த அம்மா குடி இல்லாததால்தான் அங்கு படித்தவர்கள் தொகை 100க்கு 99 பேர். இங்கு கல்விக் கடவுளச்சிக்கு ஆண்டுதோறும் பள்ளிக்கு விடுமுறை விட்டுக் கலைமகள் பூசனை செய்ய ஏற்பாடு செய்திருக்கிறது நமதரசு. அதனுல் தான் படித்தோர் தொகை இங்கு 100க்கு 36 பேர். இதைக் கூட விடாமல் அந்த அம்மான் பார்த்துக் கொள்வாள் என்பது அரசுக்குத் தெரியும். நாற்பது ஆண்டுகளின் பேராயக் கட்சியின் ஆட்சியில் மக்களுக்குக் கல்வி வழங்கியுள்ள அழகு இது.

இந்த நிலையில் இந்திய நாட்டின் காலஞ்சென்ற தலைமையமைச்சர் இராசீவ்காந்தி புதுக் கல்வித் திட்டம் ஒன்றைக் கொண்டு வந்தார். அதைப் படித்து விட்டால் 21-ஆம் நூற்ருண்டிற்கு மிக விரைவாக—தங்கு தடையின்றிப் போய்விட முடியுமாம். கூரையே இல்லாப் பள்ளிகளை வைத்துக் கொண்டு அதைச் சரிப்படுத்த இயலாமையை உணராத இராசீவ் புதுவகை அறிவியற்கருவிகளை வைத்து ஆசிரியர்கள் இல்லாமலே பாடங்களைக் கற்பிக்கப் போவதாய்ப் பீற்றிக் கொண்டு திரிந்தார். 1947-இல் பிறந்த ஒருவர் இன்னும் கையெழுத்துப் போடத் தெரியாமல் பெருவிரல் கோட்டைப் பதித்துக் கடன் வாங்கிக் கொண்டிருக்கிருர். முதியோர் கல்வித் திட்டம்,

அகவை (வயது) வந்தோர் கல்வி நடுவம், முறை சேராக் கல்வி எனப் பல இருந்தும் இன்னும் அடிப்படைக் கல்வி கூட ஏழை மக்களில் பெரும்பாலார்க்குக் கிடைக்கவில்லை. இந்த நாட்டரசு கல்விக்காகக் கோடி கோடியாகச் செலவை எழுதிக் காட்டிக் கொண்டிருக்கிறது. பெருமிதம் கொள்கிறோம். ஓர் இந்திய ஆட்சிப்பணி (I.A.S.)-க்கோ ஓர் இந்தியக் காவலர்ப்பணி (I.P.S.)-க்கோ தமிழர்கள் வரமுடியவில்லை: வெளி மாநிலக்காரனே இப் பணிக்குத் தமிழ்நாட்டில் அமர்த்தப் படுகிறான். இந்த ஒழுங்கு கெட்ட ஆட்சியாளர்கள் இந்த நிலையில்தான் தமிழ் நாட்டை ஆளப்போகிறோம் எனப் பறையடித்து ஆடிக் கொண்டிருக்கிறார்கள்.

### பொதுத் தூய்மை:

நாட்டில் சாலைகள் மக்கள் நடக்க, பேருந்துகள், சரக்குந்துகள், மகிழுந்துகள், மிதிவண்டிகள் போன்றவற்றிற்குப் பயன்பட அமைக்கப்படுபவை. நாற்பது ஆண்டுகள் ஆட்சியில் சாலைகளின் நிலைமையைப் பார்த்தால் சாலைகள் இனிமேல்தான் அமைக்க வேண்டும் எனத் தோன்றும். அவ்வப்போது அமைச்சர்கள், பெரிய அதிகாரிகள் வரும் சாலை மட்டும் மிக ஒழுங்காகவும் அடிக்கடி பழுது பார்க்கப்பட்டுப் பள பள வென வைக்கப்பட்டுள்ளன. மற்றைய சாலைகள் யாவும் பள்ளங்களாய் உள்ளன. அவற்றில் மழைக் காலத்தில் தண்ணீர் தேங்கி ஆடுகள், மாடுகள், குதிரைகள் முதலானவற்றைக் குளிப்பாட்டப் பயன்படுபவையாக உள்ளன. தேங்கிய நீரில் சருகுகள் விழுந்து கெட்ட நாற்றம் வீசும். மூன்று திங்களுக்கொருமுறை சாலையில் செல்லும் சரக்குந்து, பேருந்து வண்டிகளுக்குச் சாலைவரி ஆயிரக்கணக்கில் அரசு தண்டுகிறது. அப்பணம் எங்கு போகிறதோ என்று நாட்டை ஆளுபவர்களுக்குத்தாம் தெரியும். மழை பெய்து விட்டால் சாலைகளில் நடக்கவே முடிவதில்லை. தண்ணீர் தேங்கிய குட்டைகளில் கொசுக்கள் மிகவும் உருவாகிப் பக்கத்திலுள்ள வீடுகளில் மாந்தர்களை உறங்க விடுவதில்லை. பேருந்துகள் நிற்கும் நெல்லை, மதுரை, கோவை, திருச்சி போன்ற நகரப் பேருந்து நிலையங்களில், மழை பெய்ததும் முட்டுக்கால் வரை தண்ணீர் தேங்கி, நடப்பவர் ஆடைகளைத் துவட்டிவிடும். வண்டிக்காக நிற்கும் போக்குவரத்துத்துறை அதிகாரிகள் உள்பட அனைவரையும் நனைக்கும். ஆனால் அவர்கள் அதை பற்றிக் கவலை கொள்வதில்லை. தண்ணீர் தேங்குவதால் பொதுநலம் கெடுகிறது என மேலிடத்திற்குச் சொன்னால் தண்ணீர் இல்லாக் காட்டிற்கு மாற்றப்படுவார்கள். எனவே எவரும் நடவடிக்கை எடுக்க விரும்புவதில்லை. சாலைகளில் அவற்றின் ஓரங்களில் விலங்குகளும் மாந்தர்களும் மலம், நீர் கழிப்பது பழக்கத்திற்கு வந்து விட்டது. மலம் நீர் கழிப்பதற்குக் காசு பெறும் கழிப்பிடங்களும் உண்டு. ஆனால் அவையும் தூய்மையற்றதாகவே இருக்கும். கழிவு நீர் செல்லுவதற்கு ஓடைகள் இருந்தாலும் அவற்றுக்கு மூடி இல்லாமையால் காண அருவருப்பாய் இருக்கும். மக்களும், நல்வழி (சுகாதாரம்) அதிகாரிகளும் மூக்கைப் பிடித்துக் கொண்டுதான் நடக்க வேண்டும். ஆனால் அதைப் பற்றி அவர்கள் ஒன்றுஞ் சொல்வதில்லை. நம்நாட்டு மக்கள் நல்லவர்கள் ஆயிற்றே! இவற்றையெல்லாம் சரிசெய்ய நகர மன்றங்கள் உள்ளன. அங்கு அரசியல் குழுச் சண்டைகள் நடக்கிறதே ஒழிய சீரழிந்துவரும், இப்படிப்பட்ட அருவருப்பான சூழலைச் சரிசெய்ய திட்டங்கள் பற்றிப் பேசமாட்டார்கள். சாலைகளில் இருமருங்குகளிலும் இரவலர்களின் குடியிருப்புகள். இவர்கள் இந்தியக் குடிகள். அது மட்டுமா அவர்களும் இந் நாட்டு மன்னர்கள். அவர்கள் 1947-க்குப் பிறகுதான் பிறந்தவர்கள். அந்த வழியாக அமைச்சர்கள் வந்தால் அவர்கள் போகும்வரை ஊர் கடத்தப் படுவார்கள். எனவே இந் நாட்டில் இரவலர்களே இல்லை எனப் பேசுவார்கள். அமைச்சர்களுடைய கண்களில் இரவலர்கள் அகப்பட வாய்ப்பில்லையே. பொதுக் கழிப்பறைகள் சில இடங்களில் உள்ளன. அந்த அறைகளில் அமைச்சர்களை கொண்டுபோய் விட்டால்தான் தெரியும். அப்படியோர் காலம் வர வேண்டும். அங்கு தூய்மை வேலைகள் நடந்து பல கிழமைகள் ஆகியிருக்கும். சுற்றுப்புறத் தூய்மை பற்றித் தலைமையமைச்சர் அறிவித்துள்ள 20 வகைத் திட்டங்களில் படித்துப் பார்த்துக் கொள்ளலாம் அதைப்பற்றி வானொலியில் மிகப் பாராட்டிப் பேசுவதைக் கேட்கலாம், அப்படிப் பேசுபவர்கள் நடைமுறையில் நடப்பவற்றைப் பற்றி பேசலாகாது. ஏனென்றால் நம் நாட்டு வானொலிகள் உண்மையை ஒலிபரப்புவதற்காக ஏற்படுத்தப் பட்டவையல்ல என்பது பொய் பேசுவோர்களுக்கு நன்றாகத் தெரியும். அரசு அலுவலகம், பள்ளிகள், மருத்துவமனைகள் இருக்கும் இடங்களைச் சுற்றிக் கழுதைகளும், பன்றிகளும், ஆக்களும் கழிவு கழித்து விட்டு அங்கேயே தங்கி உறங்கும். கண்காணிப்புக் காவலர்கள் (Watchman) பணியாற்றுகிறார்கள். அவர்களிடம் இதைப்பற்றிக் கூறினால், அவர்கள் கண்டு கொள்வதில்லை.

வணிகர்கள் விற்பனைப் பொருள்களை வைத்திருக்கும் இடங்களில் ஈப் படைகள். அவற்றோடு போரிட வேண்டாமென்று நல்வழி (சுகாதார) அதிகாரிகள் இருப்பார்கள் போலும்! தொடக்கப் பள்ளிகளில் மாணவர்கள், ஆசிரியர்களுக்குக் கழிப்பிடங்கள் இருப்பதில்லை. ஆய்வாளர்கள் பள்ளிப் பார்வைப் பொத்தகங்களில் எழுதி வைத்திருப்பதை தலைமையாசிரியர்கள் படிகள் எடுத்து மேலதிகாரிகளுக்குப் பல ஆண்டுகளாக அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவற்றைப் படித்துப் பார்க்க வேண்டிய கட்டாயம் எதுவும்

Scanned with CamScanner

இல்லை. எனவே ஆசிரியர்களும் மாணவர்களும் பள்ளியைச் சுற்றி அந்தக் கடமைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதனால் அரசுக்கு கழிப் பறைகள் கட்டும் தொந்தரவுகளில்லை. இதைப்பற்றி யெல்லாம் ஆசிரியர்கள் அரசுக்குக் கொடுக்கும் கோரிக்கைகளில் எழுத இடமில்லை. கழிப்பறைகள் கட்டக் கோரினால் சம்பள உயர்வு நிறுத்தப்படலாம் என்ற அச்சம் கோரிக்கை அணியஞ் செய்பவர்களுக்குத் தெரியாமலா போகும்? ஆக இவற்றை யெல்லாம் ஐந்தாண்டுத் திட்டங்களில் சேர்க்க மறந்திருப்பார்கள். நாட்டையாவது தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டாவா? பெரிய பெரிய விளைவுகளைச் செய்ய வேண்டியிருப்பதால் இவை யெல்லாம் தேவையில்லை யென்று விட்டு விட்டார்கள் போலும்!

**அரசு அலுவலர்களின் இயக்கம்:**

அரசு அலுவலகங்களில் அடிக்கும் கெட்ட நாற்றம் போல வேறெங்குங் காணல் இயலாது. அலுவலகத்தில் கடை நிலை ஊழியர் முதல் மேல் மட்டம்வரை கையூட்டு வாங்கா நிலை இருத்தல் கூடா தென்ற நிலை உள்ளது. இவர்களை யாரும் ஒன்றுஞ் செய்ய இயலாது. வெள்ளையர் காலத்தில் கையூட்டு வாங்கினால் குற்றம். பேராயக் கட்சி ஆட்சியில் வாங்கா விட்டால் குற்றம். அதனால்தான் அனைவரும் வாங்குகிறார்கள். அமைச்சர்களில் தலைமையமைச்சர் தொடங்கி எல்லா அமைச்சர்களும் கையூட்டு வாங்காவிடில் நாட்டின் வளம் கெட்டு விடும்! மருத்துவக் கல்லூரியில் சேர ஓர் இலக்கம், பொறியியற் கல்லூரிக்கு ஐம்பதினாயிரம் முதல் எழுபதாயிரம் வரை கையூட்டுகள் உண்டு. அரசு வேலைகளுக்கு வேலையின் வகைக்குத் தகுந்தபடி கையூட்டின் அளவு கூடும், குறையும். இதற்கு வகுப்புரிமையெல்லாம் கிடையாது. யாராக இருந்தாலும் அளவின்படி கொடுத்தாக வேண்டும், அல்லது வேலை கிடைக்காது. இந்த அளவைக் கொடுக்க முடியாமல்தான் அரசுத்துறையில் மிகுதியான வேலை இடங்கள் வெற்றிடங்களாக உள்ளன. வேலை இல்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க முடியாமல் இருப்பதற்குப் பல கரணியங்கள் உண்டு. அதில் கையூட்டுக் கொடுக்க முடியாமல் இருப்பதுவும் ஒன்று. தொழிற்கல்வி, கலைக்கல்லூரிகளில் கையூட்டு வாங்க மாட்டார்கள். ஆனால் நன்கொடை வாங்குவார்கள்.

வேலை தேடித்தரும் அலுவலகம் என்று மாவட்டந்தோறும் உண்டு. வேலைக்கு உறுதி செய்யப்பட்ட அகவை முடியும்வரை அவர்களுடைய எண்கள் பரிந்துரைப்பது வேண்டாத வேலை. அங்குப் போவோரிடம் எவ்வளவு படித்திருக்கிறாய் எனக் கேட்க மாட்டார்கள். எவ்வளவு வைத்திருக்கிறாய் என்று கேட்டுத்தான் எண்கள் பரிந்துரைக்கப்படுகின்றன. இந்தத் தகுதியுடையவர்கள் வேலை வாங்கிவிடலாம். வேலைக்குப் போனபின் அவர்களும் இந்த வேலையைத் தொடங்கி விடுவார்கள். பதவி உயர்வு வாங்குவதற்கு, அதற்குக் கொடுக்க வேண்டிய தொகையை மிகக் கவனமாயிருந்து தங்களிடம் சிக்கியவர்களிடம் கறந்து விடுவார்கள். திருமணம் உறுதி படுத்துவதற்கு சம்பளமும் கிம்பளமும் கணக்கில் எடுத்துக் கொண்டே பெண் வீட்டாரிடம் மணக் கொடைக் கணக்கெடுக்கப்படும்.

அரசு மருத்துவமனைகளில் கையூட்டு வாங்குவதும் கொடுப்பதும் குற்றம் என எழுதப் பட்ட ஒரு பலகை நெடுநாளாகத் தொங்குகிறது. அதை நம்பிய நோயாளி பிழைக்க முடியாது. மருத்துவக் கல்லூரியில் சேர்வதற்குக் கொடுத்த பணத்தை மறக்காமல் கேட்பார்கள். ஏனென்றால் கல்லூரியில் சேர்வதற்கு பணங் கொடுக்கும்போதே கொடுத்ததைக் காட்டிலும் பல மடங்கு கறந்து விடலாம் என்ற துணிச்சலில்தான் கொடுத்திருப்பார்கள். எல்லா மருத்துவர்களுக்கும் வெளியில் சிறு மருத்துவமனை சொந்தத்திலுண்டு. நோயாளிகள் முதலில் இங்குச் சென்றுதான் பின் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்படுவார்கள். இப்படிப் போனவர்கள்தான் விரைவில் நலம் பெறுவார்கள்.

போக்குவரத்துத் துறை என்று ஒன்றுள்ளது. இதற்கு ஓர் அமைச்சரும் உண்டு. இங்குப் பணியாற்றும் அலுவலர்கள் தங்களுடைய சம்பளத்தில் அரிசி, பருப்பு முதலிய பொருட்கள் வாங்க வேண்டிய நிலை கிடையாது. கடைநிலை ஊழியர் முதல் இங்கு மிதி உந்து வண்டி வைத்திருக்கிறார்கள். நல்ல வளமனை இல்லாத ஊழியர்களே கிடையாது. வண்டிக்காக சாலைவரி, இசைவு (Permit) ஆணை முதலியன வாங்குவதற்கு வண்டி வைத்திருப்பவர்கள் வெறுங்கையுடன் அலுவலகத்திற்குள் போகக் கூடாத தீண்டப்படாதார். அனைத்துக்கும் வெளியில் தரகர்கள் நிற்பார்கள். அவர்களிடம் அரசுக்கு 700/=மேனி கட்டவேண்டுமானால் 1500/=வரை கையூட்டுக் கொடுக்க வேண்டும். அல்லது எந்த வேலையும் நடக்காது. அலைய வேண்டியதுதான். அமைச்சருக்கே இதுபற்றித் தெரிவித்தாலும் தெரிவித்தவர்களுக்குத்தான் துன்பம். எவ்வகை நன்மையும் கிடையாது. ஏனென்றால் இந்த அலுவலகத்தில் விதைத்தகையூட்டு விதை மூளைத்து அமைச்சகம் வரை படர்ந்து பயனைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இப்படித் தண்டும் பணக் குவியலைப் பங்குப் போட்டால் தலைக்கு 4000/= மேனிவரை கிடைக்கும் என்று கூறுகிறார்கள், ஆனால் இது போதுமானதாக இல்லையெனக் குறைப்பட்டுக் கொள்கிறார்களாம்! இன்னும் கூடுதலாய்த் தண்டும்படி தரகர்களுக்கு அறிவுரை கூறப் பட்டுள்ளது. இந்நிலை அரசு அலுவலகங்களில்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# தமிழீழச் செய்திகள்!

## 1. சிங்களப் பேரின ஒடுக்கல் அரசின் கொடுமைப் போக்கு!

முடிவில்லாத தமிழீழப் போராட்டம் போராக எழுச்சி பெற்று, இலங்கையில் தமிழ் மக்களை அழித்தொழிப்பதில் சிங்கள அரசு இன்னமும் தீவிரமே காட்டி வருகிறது. இப்போரில் சிங்களப் படையினரே சலிப்படைந்து வருகின்றனர்.

அதனால் சிங்களப் படையிலிருந்து தப்பி ஓடுவோர் தொகை நாளுக்கு நாள் மிகுந்து கொண்டே வருகிறது. கடந்த 1993-ஆம் ஆண்டு வரை சிறீலங்காப் படைத்துறையிலிருந்து 2547 பேர் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவிட்டார்கள் என்றும், கீழ் நிலையிலுள்ள படையாளிகள் (சிப்பாய்கள்) மட்டுமன்றி, அதிகாரிகளாக உள்ள 131 உயர்நிலைப் பதவியிலுள்ள அதிகாரிகளே ஓடி விட்டார்கள் என்றும் அங்கிருந்து வெளிவரும் 'ஐலண்டு' எனும் ஆங்கில இதழ் ஒரு செய்தி அறிவித்துள்ளது.

மேலும் வடகிழக்குப் போரில் 1271 படையாளிகள் கொல்லப்பட்டார்கள் என்றும், 1445 படையாளிகள் படுகாயமுற்றார்கள் என்றும் அதில் செய்தி வெளிவந்துள்ளது.

புலிகள் படையிலும் ஆண்களும் பெண்களுமாக 800 பேர் கொல்லப் பட்டார்கள் என்றும், பூநகரிச் சண்டையில் மட்டும் 4011 பேர் ஒன்றுமறியாப் பொதுமக்கள் கொலையுண்டுள்ளார்கள் என்றும் செய்தி தெரிவிக்கிறது.

இலங்கைத் தமிழ்ப் பகுதிகளான வடக்கு கிழக்கிலுள்ள மொத்த வீடுகளில் 75 விழுக்காடு வீடுகள் சேதமடைந்துள்ளன. அதன் மேலும், உள் நாட்டிலேயே ஏழு இலக்கம் மக்கள் தங்கள் வாழ்விடத்திலிருந்து பெயர்ந்து போய் இடமற்ற ஏதிலிகளாகத் தவித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் ஓர் இலக்கத்துக்கு 98 ஆயிரம் ஏதிலிகள் அங்குகேயே ஏதிலியர் தங்கில்களில் (முகாம்களில்) துன்புற்றுக் கொண்டுள்ளனர்.

இங்கே, இந்தியாவில் மட்டும் ஓர் இலக்கத்து 72 ஆயிரம் இலங்கைத் தமிழர்கள் இப்போது ஏதிலிகளாக இருந்து வருகிறார்கள். இவர்களில் 73 ஆயிரம் பேர் தங்கில்களிலும், மீதிப்பேர் வெளியிலும் இருந்து வருகிறார்கள்.

இவர்கள் தவிர, ஏனைய வெளிநாடுகளில் ஏறத்தாழ ஐந்து இலக்கம் இலங்கைத் தமிழர்கள் ஆங்காங்கு ஏதிலிகளாக (நாடற்ற குடிமக்களாக) இருந்து வருகிறார்கள்.

இலங்கைத் தமிழ் மக்களின் நிலை இது வென்றால், இலங்கையிலுள்ள சிங்களர் வாழ்கின்ற பகுதிகளிலும் அரசின் கொடுமைச் செயல்களின் எதிரொலியாக ஒன்றுமறியா (அப்பாவி)ச் சிங்கள மக்கள் கொல்லப்பட்டு, தோண்டுகிற இடங்களிலெல்லாம் தோண்டத் தோண்ட எலும்புக் கூடுகள் வெளிவந்துக் கொண்டிருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

இவ்வளவிருந்தும், இவ்வளவுக்கும் தமிழர்க்கெதிரான போரே காரணமாக இருந்தும், சிறீலங்கா அரசு போரை நிறுத்தவும், ஒப்புரவு (சமாதான) முயற்சிகளுக்கு முகம் கொடுக்கவும் முன்வராமல் இருக்கிறதென்றால், அவ்வரசு இனச் சிக்கலுக்குச் (சுமுகமான) அமைதியான தீர்வுகாண விரும்பவில்லை என்றுதான் பொருளாகிறது.

அதே நேரம், இவ்வளவு கொடுமைகள் பக்கத்து நாட்டில் நடந்து கொண்டிருக்கையிலும், இந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் எந்த வகையான எதிரொலியும் எழாமல் இருப்பதுதான் கவலையளிப்பதாக உள்ளது.

உலகம் முழுவதும் வாழும் இந்திய மரபுவழி மக்களின் தாயகம் இந்தியாவாக இருந்தும், அதன் ஒரு பிரிவினரான தமிழ் பேசும் மக்களின் தாயகம் தமிழ்நாடாக இருந்தும், இலங்கையில் இந்திய மரபுவழி மக்களுக்கு எதிராக—குறிப்பாக தமிழ்த் பேசும் மக்களுக்கு எதிராகச் சிங்கள பௌத்த பேரின அழிப்பு அரசு செய்துவரும் இந்த இனக் கொலை நடவடிக்கைகளை—இனப் போரை நிறுத்த, இந்திய மக்கள், குறிப்பாகத் தமிழ்நாட்டு மக்கள் ஒரு சிறு அளவிலும் குரல் கொடுக்காமல் இருப்பது வியப்பும் வருத்தமும் அளிப்பதாக உள்ளது.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

வழக்கமாகவும் பழக்கமாகவும் நடந்து வருகிறது. இங்குப் பணியாற்றுபவர்கள் யாவரும் அயலவர்கள் அல்லர். அனைவரும் தமிழர்கள்தாம். இவர்களுக்கு இன உணர்வு என்பதற்குப் பொருளே தெரியாது. தான் தமிழினம் என்பதை மறந்து ஏறத்தாழ 40 ஆண்டுகள் ஆகிவிட்டன. வளமனைகள் கட்டிக் கொண்டார்கள் மனைவி மக்களுக்கு வைர நகைகள், மகிழ உந்து இன்னும் அறிவியல் பொருட்கள், மிகுதியாக வைத்திருக்கிறார்கள். இவர்களுடைய வாழ்க்கை வகைகளை அமைச்சர்கள் பார்த்து விட்டுத்தான் நாடு முன்னேறி விட்டது என்ப் பேசுகிறார்கள். சிற்றூர்ப்புறங்களுக்குச் சென்று குடிசை வீடுகளுக்குச் சென்று இக் குடிசை கட்டி எத்தனை ஆண்டுகள் ஆகின்றன என்று கேட்டால், பேராயக்கட்சி இந்த நாட்டை ஆண்டு வரும் அழகு தெரியும்.

(தொடரும்)

Scanned with CamScanner

இந்த 1994 ஆண்டிலாகிலும் அவ்வகை முயற்சிகள் நடைபெறவேண்டும் என்பது இலங்கைத் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

—தமிழீழ விரும்பி - நன்றி, 'சுதந்திரன்' பிப்:' 94.

## படையிலிருந்து தப்பி ஓடியவர்களுக்கு மன்னிப்பு:

சிறிலங்காப் படையிலிருந்து தப்பி ஓடிய படையினருள் 18 படையதிகாரிகளும், 3000 படையினரும் தேடிக் கண்டு பிடிக்கப் பட்டுள்ளனர். இவர்கள் தப்பி ஓடியதற்காகப் பாதுகாப்புச் சட்டத்தின்படி தண்டிக்கப் படவேண்டும். ஆனால் முன்னர் வேலை செய்த வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பெற்றனர். இவர்கள் முன்னர் வேலை செய்த இடங்களுக்குப் போகச் சம்மதித்ததினால் அவர்களை மன்னித்து அவ்விடங்களுக்கு அனுப்பி வைக்கும்படி படைத்துறைத் தளபதி உத்தரவிட்டுள்ளாராம்.

செய்தி: 'எரிமலை', சிலை 1993.

## ஒரு 'புலி' மகனைக் கொல்ல 3 கோடி உருவாச் செலவு:

சிறிலங்கா அரசு ஒரு புலியைக் கொல்ல 300 இலக்கம் (3 கோடி) உருவாக்களைச் செலவிடுகிறது என மக்கள் நண்பர் அமைப்பின் இணை அமைப்பாளரான சம்பிக ரணவக்க கூறியுள்ளார்.

காலி நகரமன்றத்தில் நடைபெற்ற இந்த அமைப்பின் கருத்தரங்கில் பேசிய அவர் இலங்கை அரசு இந்த ஆண்டும் மூவாயிரம் கோடி உருவாக்களை வெளி நாட்டுப் பொருளுதவியாகப் பெற்றுக் கொண்டு போர் செய்கிறது. கடந்த காலத்தில் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் எண்ணிக்கையை அரசின் புள்ளி விளக்கங்களுடன் கணக்கிட்டால் ஒரு புலியைக் கொல்ல 300 இலக்கம் உருவாயை அரசு செலவிட்டுள்ளதை அறிந்து கொள்ளலாம்.

'இக்கால் இலங்கையில் 20 இலக்கம் இளைஞர்களும் இளைஞைகளும் தொழிலின்றி அலைகின்றனர் 60 இலக்கம் விழுக்காட்டினர் உணவின்றி வாடுகின்றனர். இலங்கையையும் சோமாலியாவாக மாற்ற முயற்சி நடைபெறுகிறது. இவ்வாறான சூழ்நிலையில், புலிகளை அழிப்பதற்காக இவ்வளவு பெரும்பொருளைச் செலவிடுவதற்கு நாம் இடமளிக்க முடியுமா? படுகொலை அரசியலை முடிவுக்குக் கொண்டு வருவது எவ்வாறு? இதுபற்றியெல்லாம் நாம் சிந்தித்து முடிவெடுக்க வேண்டும், எனறும் அவர் குறிப்பிட்டுள்ளார். —செய்தி: 'ஈழநாதம்'

## புறநானூற்றுக் காலத்திய தமிழ் வீரம் இன்றும் மங்கிப் போகவில்லை:

புறநானூற்றில் ஒக்கூர் மாசாத்தியார் என்னும் பெண் புலவர் பாடிய' கெடுக சிந்தை கடிதிவள் துணிவே' எனத் தொடங்கும் பாடல் (279) ஒன்று வீரத்தின் விளைநிலமாக இத் தமிழகம் இருந்ததைப் பறைசாற்றிக் கொண்டுள்ளது. அதில்,

மேனுள் உற்ற செருவிற்கு இவள் தன்னை
யானை எறிந்து களத்தொழிந் தனனே!
நெருநல் உற்ற செருவிற்கு இவள் கொழுநன்
பெருநிரை யாகி ஆண்டுப்பட் டனனே!
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கை கொடுத்து வெளிது விரித்துடீஇப்
பாறு மயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே!

'நேற்றுக்கு முன் நாள் இவள் தமையன் போர்க்களத்திலே ஒரு யானையைக் கொன்று விட்டுத் தானும் இறந்து பட்டான்; நேற்று நடந்த போரில், இவள் கொழுநனும் இறந்து பெருமை பெற்றான். இன்றும் போர் நடக்கிறது. இவள் தன் சிறிய ஒரே மகனைப் போர்க்கு ஆயத்தப் படுத்திப் போர்க்களத்தை நோக்கிச் 'செல்க' என விடுத்து வைக்கிறாள் இவ்வீரமகளின் கடுந்துணிவு மனத்தை நெகிழ்விக்கிறது!' —என்னும் செய்தி கூறப்பெறுகிறது.

இத்தகைய தமிழ் வீரம் நம் தமிழின மக்களிடம் இன்றும் மங்கிப் போகவில்லை என்பதற்கு எடுத்துக் காட்டாகத் தமிழீழத்தில் நடந்ததாக ஒரு செய்தி வெளிவந்துள்ளது.

கொடிகாமம் மாவீரர் இல்லத்தில் 2-ஆம் தளபதி காந்தன் இயற்பெயர் (தர்மகுல சிங்கம் பிரதீபன், மாசார்பளை) என்னும் மாவீரனின் இறுதிச் சடங்கு நடைபெற்று முடியும் போது, அம மாவீரனின் தந்தையார் தம் அடுத்த மகனை, விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளரிடம் போராளியாக இணையச் செய்து, 'என்னுடைய இந்தமகனும் வீரச்சாவை எய்தினால் நானும் போர்க்களம் புகுவேன்' என உணர்வு பொங்க வீரவுரை பகிர்ந்திருக்கிறார். தாய் மண் மீட்புப்போரில் தம் தலை மகனை இழந்த தந்தை மீண்டும் தம் இளைய மகனைப் போருக்கு ஒப்படைத்துத் தாமும் அடுத்து வருவேன் என்று புகன்றது புறநானூற்றுக் கால வீரம் இன்னும் அழிந்து போகவில்லை என்பதைக் காட்டுகின்றதன்றோ?

—செய்தி: 'எரிமலை' சிலை, 1993.

---

### அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக் கொண்டு வருமாறு கேட்டு கொள்கிறோம். —அமைச்சர்.

---

Scanned with CamScanner

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வயவர்(சர்.)கூர்ம வெங்கிடரெட்டி இடைக்கால முதலமைச்சராக இருந்தார். ஆக, இப்படி ஆட்சிக் கட்டிலில் ஏறியவர்கள் தமிழரல்லாதவராக இருந்தது மட்டுமல்லாமல், தமிழர் நலனைக் குழிதோண்டிப் புதைப்பவருமாகவே இருந்திருக்கின்றனர்.

**எடுத்துக்காட்டு:-ஒன்று—''பிரகாசம் காருவின் நூலாலை ஒழிப்பும் நிலைத்திணை நெய் (வனஸ்பதி) வளர்ப்பும்'':**

1946-இல் முதன்மை மந்திரியாக இருந்த தெலுங்கர் பிரகாசம் ஓர் அணுகுண்டு அறிவிப்பைச் செய்தார். அஃதாவது, ''இனிமேல் புதிதாக நூல் ஆலைகளோ, நெசவு ஆலைகளோ ஏற்படுத்த இசைவு அளிக்கப் போவதில்லை; இருக்கிற ஆலைகளை இனி விரிவுபடுத்த இசைவில்லை, மேலும் ஏற்கனவே விரிவு படுத்துவதற்கு அளிக்கப்பட்ட இசைவு நீக்கம் செய்யப்படுகிறது.'' (2) என்பதுதான், தமிழ் நாட்டிற்கு அன்று இதைவிட கொடுமையான செயல் வேறு எதுவுமில்லை. காரணம், தமிழகத்தில்தான் அதிகமான நெசவு மற்றும் நூல் ஆலைகள் இருந்தன. அதுமட்டுமல்லாமல் ஏராளமான தமிழர்கள் தம் வாழ்வுக்கு இவ்வாலைகளையே நம்பி இருந்தனர். ஆந்திர மாநிலம் எனத் தனியாக பிரிக்கும் சமயத்திலேயே கூட, இக் கொடுரம் தமிழர்களுக்கு இழைக்கப்பட்டது. இந்தக் கொடுமைச் செயல் சட்டமன்றத்தில் இசைவின்றியே அறிவிக்கப்பட்டது. காந்தி இந்த நாள்களில்தான், ''ஆலைகள் ஒழிய வேண்டும்''கைந்நூலாடை பெருக வேண்டும்'' எனப்பேசி வந்தார். அவரை உச்சிகுளிர வைக்க, அல்லது உண்மையில் சொல்லப் போனால் காந்தி சம்பாதித்துக் கொண்ட நற்பெயரைத் தமக்குச் சார்பாகப் பயன்படுத்திக்கொள்ள அவரது கொள்கையையே தான் கடைபிடிப்பதாக, ஒரு மாயையை ஏற்படுத்தவே பிரகாசம்காரும் இதைத் செய்தார். ஆனால் அவருள் மறைந்திருந்தது தமிழர் எதிர்ப்பு மற்றும் அழிப்பு என்பது மட்டுமே என்பதை மறுக்க முடியாது.

தமிழரின் ஆலைகளுக்குத் தடை போட்ட இவர், அதே நாள்களில் பம்பாய் ஆலைகளிலிருந்து துணிகளை இறக்குமதி செய்தது, இவரது இழிவான செயலை விளக்கி அதை உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டியது. இருப்பினும் தமிழர் தம் உறக்கத்திலிருந்து எழவேயில்லை. காந்தி நிலைத்திணை நெய் (வனஸ்பதி) உருவாக்கத் தொழிற்சாலைகளையும் வன்மையாக எதிர்த்தார். பிரகாசம் காருவுக்கு இது தெளிவாகத் தெரிந்திருந்தும், இம் மாநிலத்தில் இவ்வாலைகளை மூட அவர் முன் வரவில்லை. காரணம், அவையெல்லாம் ஆந்திரர்களின் கைகளில் இருந்தன.

**எடுத்துக்காட்டு:-இரண்டு—உணவுப்பற்றுக் குறையிலும் அரசியல் நோக்கம்:**

1947-இல் இராமசாமி(இரெட்டியார்)பொறுப்பிலிருக்கும்போது, உணவுப்பற்றுக்குறை ஏற்பட்டுப் பஞ்சம் உருவாகும் நிலை ஏற்பட்டது. பற்றுக்குறைக்குக் காரணம் நெல் பதுக்கலே என்பது வெளிப்படையாய்த் தெரிய வந்து, ''காவலரைக் கொண்டு நெல்லை மீட்போம்'' என்று இரெட்டியார் மிரட்டியபோது, பிரகாசமும் அவர் அணியினரும் கூச்சல் போட்டு எதிர்த்தனர். காரணங்கள் இரண்டு உண்டு. பதுக்கலில் ஈடுபட்டோர் தெலுங்கர், அடுத்து, அன்று உணவு அமைச்சராயிருந்த இராசன் ஒரு தமிழன். அவருக்குக் கெட்டபெயர் ஏற்படுத்தி, ஆட்சிக்கும் கெட்ட பெயர் கொணர்ந்து, ஆட்சியின் மீது வெறுப்பை, வளர்த்து அதிகாரத்தை மீண்டும் பறித்துக் கொள்ள போட்ட திட்டமே இது. கடைசியாக இராசன் சட்டமன்றத்தில் வெளியிட்ட புள்ளி விளத்தம் ஒன்றே இதற்குச் சான்று. தமிழ் நாட்டில், தஞ்சை பெருமளவில் நெல் விளைச்சல் செய்யும் மாவட்டம். இம் மாவட்டத்திற்கு ஆண்டு இறுதிக்குள் 2,64,200 கல்லெடை(டன்)கொள்முதல் நெல்கொடுக்க வேண்டுமென, வரம்பு இடப்பட்டது. ஆகத்து31-ஆம் பக்கலுக்குள் 2,12,354 கல்லெடை கொள்முதல் ஆகிவிட்டது. ஆனால் ஆந்திராவின் ஆய்ந்து நெல் விளையும் மாவட்டங்களிலிருந்து கொள்முதல் வரம்பு 7,45,300 கல்லெடைகளாக உறுதியாக்கப்பட்டபோதும், ஆகத்து 31-க்குள் 4,77,433 கல்லெடை மட்டுமே கொள்முதலாகியது. ஆக, நெருக்கடியான நிலையிலும் குழிதோண்டுவதிலேயே அவர்கள் கருத்தாயிருந்தார்கள்.

**''திராவிட—தமிழ்நாடு'':-**

இந்தியா விடுதலை அடையும் சமயத்திலும், அதற்கு முன்னரும் கூட ஏறத்தாழ எல்லா இனங்களும், இன அடிப்படையில, அல்லது மொழி அடிப்படையில் ஒன்று சேர்ந்தன. ஆனால், தமிழர்களோ சாதி அடிப்படையில் பிரிந்து தங்களுக்குள்ளேயேச் சண்டையிட்டு மாய்ந்தனர். 'வடவர் எதிர்ப்பு, ஆரிய மாயை, பார்ப்பனீய எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு, தனித் தமிழ்நாடு' எனும் தெளிவான சிந்தனை, கொள்கை மற்றும் நோக்கத்தோடு பொதுவாழ்வில் ஈடுபட்ட தலைவர்களெல்லாம், நாளாவட்டத்தில் அஞ்சி, தந்நலம் பிடித்துப், பதவியாசை வெறி ஏற்பட்டு, ஒப்போலை கட்சிகளாய்ப் பிரிவுபட்டு, நோக்கங்களைக் காற்றில் பறககவிட்டு, விலைபேசி விற்று, தமிழர் நல்னுக்கெதிராய்க் கூச்சமின்றி ஒப்புரவு(சமரசம்)செய்து கொண்டனா.

பெரியார் உருசியா சென்று வந்தார், பொதுவுடைமைக் கொள்கை அவரைக் கவர்ந்தது. அதனடிப்படையில் 1938 அக்டோபர் 23 'விடுதலை' ஏட்டில் ஐந்து திட்ட கோரிக்கையை மக்கள் முன் வைத்தார்.

Scanned with CamScanner

1. "இனியாவது 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று ஆரவாரம் செய்யுங்கள்."
2. "உங்கள் கைகளில் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற வாசகத்தை எழுதிப் பதியுங்கள்"
3. நம் விட்டுக்குள் அயலான் புகுந்து கொண்டதோடல்லாமல், அவன் நமக்குத் தலைவன் (எசமான்) என்றால்: நமக்கு இதைவிட மானமற்ற தன்மை: இழி தன்மை வேறு என்ன எனச் சிந்தியுங்கள்."
4. "புறப்படுங்கள்! தமிழ் நாட்டுக்குப் பூட்டப்பட்ட விலங்கைச் சுக்கு நூருக்குங்கள்."
5. "தமிழ்நாடு தமிழருக்கே." (3)

ஆனல், வெகு விரைவிலேயே இக் கொள்கைகளிலிருந்து பெரியார் பின் வாங்கினர். அதற்கும் கரணங்கள் உண்டு.

1. இங்கிருந்த குடியேற்ற அரசு பொதுவுடைமையர் மீது தாக்குதல் தொடங்கியது.
2. பெரியாருடைய இதழ் ஆசிரியரும், அவரது உடன்பிறப்புமான கிருட்டிணசாமி மீது அரசு, வழக்குத் தொடர்ந்தது.
3. 1949 செப்டம்பர் திங்கள் 17-இல் திராவிடக் கழகம் தி.மு.க.வாக உடைந்து,அது தேர்தலில் ஈடுபட முடிவு செய்து, தாய்க் கழகத்தை விட வெகுவிரைவாக வளர்ந்தது.

இவையனைத்தும் அவரிடம் அச்சத்தை உண்டுபண்ணி, தன்மதிப்பு(சுயமரியாதை)க்கொள்கையை அவர் நீர்த்துப் போகச் செய்தார். அமைப்பைக் காப்பாற்றுவதற்காகக் கொண்ட குறிக்கோளைக் கைவிட்டார். தன்மதிப்பு(சுயமரியாதை) எனும் கொள்கை சீர்திருத்தக் கொள்கைளாக மாறியது. தமிழ், தமிழ்நாடு, தாய்நாட்டுப்பற்று எனத் தொடங்கி மக்கள் நடுவில், பேச்சாற்றலால் புகழ் பெற்ற அண்ணவும் வெகு விரைவிலேயே பாதை தவறினர். "தனித்தமிழ்நாடு" என்பது போய் "அடைந்தால் திராவிட நாடு, இன்றேல் சுடுகாடு" எனும் அடுக்குமொழிச் சொற்களே வெள்ளம்போல் பாய்ந்தன. குறிக்கோள் காற்றில் பறந்தது. "திராவிட நாடு அடைவோம்" எனும் கூச்சலுக்குக் காரணமாயிருந்ததும் ஒரு கட்டாயத்தின் பேரிலேயே. ஈ.வெ.கி.சம்பத் தி.மு.க.விலிருந்து பிரிந்து தமிழகம் முழுவதும் சுற்றுச்செலவு செய்து அண்ணவின் போலிக் கொள்கைகளையும், ஒப்புரவு வகையையும் மக்கள் நடுவில் அம்பலப்படுத்தினர். அதைச் சரிகட்டவே, அண்ண இங்ஙனம் ஒரு போலிப் புரட்சியைப் பேசினர். ஆட்சியை குறிக்கோளாய் கொண்ட நாள்களிலேயே தமிழர் நலனில் அவர் கொண்ட குறிக்கோள்களை அவர் கைவிட்டார் என்பதே உண்மை. 1959-இல் சட்டமன்றத்தில் அன்று' பொருள்துறை அமைச்சராக இருந்த சி.சுப்பிரமணியம், ஒரு கேள்வி கேட்டு அண்ணவை மடக்கினர். "சட்டமன்ற உறுப்பினரான நீங்கள், இந்திய அரசியல் சட்டதை ஏற்றுக்கொள்வதானல் பிரிவினை கேட்பதை நீங்கள் விட்டாக வேண்டும்!" என்றார். அண்ண, மழுப்பினர், பூசி மெழுகினர். "நடுவண் அரசிடம் குவிந்து கிடக்கும் அதிகாரத்தைச் சட்டப்படி போராடி வென்றெடுப்பதே எமது குறிக்கோள்" என நழுவினர். "மாநில சுயாட்சி" போன்ற கொள்கை, வெற்றுச்சொற்களாய் மெதுவாய்த் தோன்றியது,

ஆரிய மாயையைச்சாடிய அண்ண, இப்போது திராவிட மாயைப் புகுத்தினர். இந்தியை எதிர்த்த தி.மு.க. ஆங்கிலத்துக்கு அடிவருடியது. பார்ப்பனியத்தை எதிர்த்த கழகம் பிற இன வந்தேறிகளைக் கம்பளம் விரித்து வரவேற்றது; வளரவிட்டது. அவர்களின் சுரண்டலுக்குத் துணைபோனது. 'திராவிடம்" எனும் சூழ்நிலைக்கேற்ற(சந்தர்ப்பவாத) அரசியல்மாயை உருவாக்கப்பட்டது. குறிக்கோள் இழந்தால் புறக்கணிப்புதானே! ஆக இவர்கள் கொள்கைப் புரட்டர்களானர்கள்.

பிற இன மக்களோ இந்திய விடுதலைக்கு முன்பிருந்தே தங்களது தனித்தன்மையிலும், இன வேட்கையிலும் கருத்தாயிருந்தனர். எடுத்துக்

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

---

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்நாட்டையே இங்கிலாந்தாக மாற்றியிருக்கலாம். இச் செலவெல்லாம் அரசுப் பணத்தில்தான் செய்யப்பட்டன என்றால் அவரை இவ்வுலகிலுள்ள எந்த அறமன்றமும் மன்னிக்காது! அல்லது இச் செலவெல்லாம் அவருடைய பணத்தில்தான் என்றால், எந்த மக்கள் மன்றமும் பொறுத்துக் கொள்ளாது! அல்லது இவை இரண்டுமே அன்று, அச்செலவெல்லாம் அவருடைய அடிவருடிகளான அமைச்சர்கள், குட்டித்தலைவர்கள், அடிமைத் தொண்டர்கள் உடையவை என்றால், இவ்வுலகில் பிறந்து அறிவுள்ளவனுக ஊடாடும எவனுமே நம்ப மாட்டான்! இவற்றுக்கு கட்டுப்பாடு வேண்டாவா?

இவை மட்டுமன்று! இவரும் இவருடைய தோழமை அமைச்சர்களும் நாள்தோறும் கொண்டாடிவரும் விழா வேடிக்கைகளுக்குச்செலவாகும் மக்கள் வரிப்பணத்தை வேறுவகையில்—நாட்டு மக்களுக்கு நன்மை தரும் திட்டங்களில்—செலவிட்டால் என்ன? இத்தகைய அறக் கொடியவர்களை, வழிப் பறிக் கொள்ளையர்களை, உட்பகைவர்களைப் பதவி நீக்கம் செய்ய ஏதாவது வழிவகை செய்தாலன்றி இது குடியரசு நாடாக இருத்தல் முடியாது; கொடிய அரசு நாடாகவேதான் இருத்தல் முடியும் என்பதை நாம் உறுதி செய்து கொள்வோமாக!

இறுதியாக ஒரு சொல். இவ் வழிம்புகளுக்கெல்லாம் அடிப்படையாக உள்ள பெருமைமிக்க ஒருவரை நாம் சுட்டவேண்டுமானல் அவர் கலைஞராகவன்றி வேறுயாராகத்தான இருக்கமுடியும் என்று ஆராய்ந்து பார்த்து முடிவு செய்வதை அன்பர்களே தீர்மானித்துக் கொள்வார்களாக! O

Scanned with CamScanner

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்களை எதைப் பற்றியும் சிந்திக்க விடாமல் அவர்களைத் தொடர்ந்து வறுமையிலும் அடிமைத் தனத்திலும் வைத்துச் சுரண்டுவதே இன்றைய முதலாளிய அரசு அமைப்பின் நோக்கமாகும்.

பணம்தான் எல்லாவற்றுக்கும் தேவை என்றால் அரசே போதிய பணத்தை அச்சடித்துக் கொள்ள-லாமே. நம்மிடம் ஏன் வரியாக வாங்க வேண்டும். உழைப்பில் ஈடுபடாத அரசு அதிகாரிகளும் மற்றும் முதலாளிகளும் தான் பணத்தை அச்சடித்து வைத்துக் கொண்டு உழைப்பாளர்களாகிய உழவர்-களையும் தொழிலாளர்களையும் பொருள் உருவாக்கம் செய்ய வைக்கின்றனர். அரசு விளம்பரக் கருவிக-ளான வானொலி—தொலைக்காட்சி—தாளிகைகள் வாயிலாக உழைக்கும் மக்களுக்கு ஆசை உரைகள் சொல்லப் பெற்றுத்தொடர்ந்து அவர்களை உழைக்க வைத்து ஓடாகத் தேய வைக்கின்றது இன்றைய அரசு. இந்த உண்மைகளை எல்லாம் உழவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டுமானால் முதலில் தங்-களை போன்ற உழவர்களை ஒன்றாக அமைப்பாக ஆக்கிக் கொண்டு, இவற்றைப் பற்றிய உண்மை-களை மற்றவர்களுக்கும் எடுத்துச்சொல்ல வேண்டும்: அதன்மூலம் ஒருவருக்கொருவர் புரியாத கருத்துகள் புரியும்; உழைக்காத—சோம்பேறிப் பிரிவினரை நோக்கிப் போராடத் துணிவு வரும்.

பணம் அதிகமாக வைத்திருப்பவன் பொருள்-களைப்பற்றியோ, அவற்றை உருவாக்கம் செய்த உழைக்கும் மக்களைப்பற்றியோ சிந்திப்பதில்லை. மேலும் அதிகமாக உடல் உழைப்புச் செய்பவர்கள் அனைவரும் உடல் உறுப்புகள் கருத்தும்,சிதைந்தும் கடினமான நோயிலும் வாடிக் கொண்டிருக்கின்ற-னர். கடினமாக உழைப்பவர்களை கீழ்ச்சாதிக்காரன் என்றும், பட்டிக்காட்டான் என்றும் உழைக்காத மேல் சாதிப் பிரிவினர் இழிவாகப் பேசுகின்றனர். ஆக மாந்த வாழ்க்கை தொடர்ந்து நடை-பெறுவதற்கு உந்து ஆற்றலாக உள்ள உழைக்கும் மக்கள் குமுக மதிப்பில் கீழான வர்களாகவும், மற்ற-வர்களின் உழைப்பைச் சுரண்டி ஏமாற்றுபவர்கள் உயர்ந்தவர்களாகவும் மதிக்கப்படுகின்றனர். இந்தப் போலியான குமுக அமைப்பைச் சிதைத்து, சீர் திருத்தி அனைத்து மக்களும் அனைத்து உரிமைகளும் பெற உழைக்கும் மக்கள் தாம் முதலில் முன்வர வேண்டும். சாதி, மத, கட்சிப் பிரிவுகளை ஒதுக்கித் தள்ளுவோம். நம்மை ஒன்றாகவிடாமல், நம்மை ஆளுமை செய்கின்ற சாதி, மத, கட்சித் தலைவர்-களை அடையாளம் காணுவோம். தமிழ்நாட்டு உழைக்கும் மக்களே, நம் ஆற்றலை நாம் உணரு-வோம்! நம் உரிமையைப் பெறுவதற்குப் போராடுவோம். O

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

காட்டிற்கு 1855-இலேயே "ஆந்திர பிரகாசிகா" என ஆந்திரர் இதழ் ஒன்றினைத் தொடங்கினர். ஆந்திரப் பெயர் ஒலிக்க வேண்டுமென்பதில் தெளிவாயிருந்தனர். "கேரள சஞ்சரி, கேரளோ-தய, மலையாளி" என அவர்களும் இன, மற்றும் மண்ணின் பெயரை முன்னிறுத்தி இதழ்கள் நடத்தினர். ஆனால், இதனை இங்கோ 1917-இலும் தமிழகத்தில் "திராவிடன்" என்றே இதழை கொணர்ந்தனர்.

(தொடரும்)

---

TN/MS(C)657

**உ. த. மு. க. வின் உயர்ந்த கொள்கைகள்!**

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்த-வும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

**சிந்தனைக்கு-89**

தமிழினத்தவரில் பலர் தங்களின் தனிப்பட்ட வாழ்வியல் நலன்களுக்குப் பார்ப்பனரின் உதவி தேவை என்பதால், தமிழ் மொழி வளர்ச்சியிலும் தமிழின மறுமலர்ச்சியிலும், தமிழ்நாட்டு விடு-தலையிலும் அக்கறையற்றவர்களாக இருப்ப-துடன், காட்டிக் கொடுக்கவும் செய்கிறார்கள். உண்மைத் தமிழர்கள் அவர்களை அடையாளம் கண்டு கொள்வதுடன், அவர்களிடம் எச்சரிக்கை யாகவும் இருக்க வேண்டும்.


(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண்: 169.

அனுப்புதல்:

**தமிழ்நிலம்**

5, அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829

உறுப்பினர்:

| | |
|---|---|
| தனி இதழ் விலை | உரு: 1-50 |
| ஆண்டுக் கட்டணம் | உரு: 36.00 |
| அரையாண்டுக் கட்டணம் | உரு: 18-00 |

பெறுநர்: நூல் அஞ்சல்

திரு / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.